சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 07.02.2025 SC.17/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கதிரவன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | அ.சா.4 | | | |

-----------------------------------------------------------

<u>முதல் விசாரணை</u>

நான் கம்பம் உலகத்தேவர் தெருவில் 2 வது வார்டில் குடியிருந்து வருகிறேன். 04.05.2020 ம் தேதி மாலை 6.15 மணியளவில் நானும் உதயக்குமார் என்பவரும் கம்பம் வாரச்சந்தை முன்பாக நின்று கொண்டிருந்தோம். அப்போது கம்பம் வடக்கு காவல்நிலைய ஆய்வாளர் அங்கு வந்தார். அப்போது மாயாண்டி பொன்னையா என்பவர்களை எங்கள் முன்பு கைது செய்து வைத்திருந்தார்கள். அப்போது மாயாண்டி பொன்னையா என்பவர்கள் நின்று கொண்டிநதார்கள். அவர்களிடம் ஆய்வாளர் தங்கராஜ் இடப்பிரச்சனை சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தார். மாயாண்டியிடமிருந்து கத்தியை வாங்கினார். அப்போது போலிசார் என்னிடம் இரண்டு கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.2**. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.3**.

<u>குறுக்கு விசாரணை</u>

சந்தைக்கு எதிராக பேருந்து டிப்போ, டீ கடைகள் போன்ற அனைத்து கடைகளும் வரிசையாக உள்ளது என்றால் சரிதான். கம்பம் வாரச்சந்தையில் நான் நின்றுகொண்டிருந்த இடம் பேருந்து நிறுத்தம் தான். அந்த இடத்தில் எனக்கு குடியிருப்போ கடைகளோ இல்லை. காயம்பட்ட தங்கராஜ் எனக்கு மாமா முறை வேண்டும். என்னிடம் கையெழுத்து வாங்கிய ஆவணங்களில்

சொல்லப்பட்டிந்த குற்ற எண், வழக்கு விபரக்ஙள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் நான் கையெழுத்து போட்டேன். கையெழுத்து போட்ட பின்னர் என்னை யாரும் விசாரிக்கவில்லை. எதிரிகளை ரோட்டின் மேல்புரம் வைத்து பார்த்தேன். அந்த இடத்தில் நான் மொத்தமாக ஒரு 5 நிமிடம் இருந்தேன்.அதன்பின்னர் எதிரிகளை போலிசார் வடக்கு காவல் நிலையம் அழைத்துச் சென்றுவிட்டார்கள். எனக்கு எந்த விபரமும் நேரடியாகத் தெரியாது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து அவர்கள் தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், அவர்களிடமிருந்து எந்த வழக்குச்சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றும், அ.சா.2 தங்கராஜ் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 07.02.2025 SC.17/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பார்த்தசாரதி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | அ.சா.5 | | | |

---

முதல் விசாரணை

**நான்** கம்பம் சுப்பிரமணிய கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். கடந்த 04.05.2020ம் தேதி மதியம் 2,30 மணியளவில் நான் வீட்டில் சாப்பிடுவதற்காக வந்தேன். அப்போது சத்தம் கேட்டது. நான் வீட்டிலிருந்து வெளியில் வந்து பார்த்தேன். அப்போது எனது நண்பர் கல்யாணக்குமார் என்னை வேகமாக இருசக்கர வாகனத்தை எடுத்து வரச்சொன்னார். என்னுடைய இருசக்கர வாகனத்தில் தங்கராஜை கம்பம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன், இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

அ.சா.1 கல்யாணக்குமார் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் 100 மீட்டர் துாரம் இருக்கும். ஒரே தெருவில் தான் குடியிருக்கிறோம். சத்தம் கேட்டு வெளியே வந்தேன் என்ற விபரத்தை நான் முதன் முதலில் நீதிமன்றத்தில் தான் சொல்கிறேன் என்றும், போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்த அன்று சுமார் 3, 4 மணிக்கும் போலிசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் காயம்பட்ட நபர்களை அரசு மருத்துவமனை அழைத்துச்செல்லும்போது என்னுடைய உடையில் ரத்தம் பட்டதா என்றால் இல்லை. என்னுடைய

இருசக்கர வாகனத்திலும் ரத்தம் படவில்லை. எத்தனை மணிக்கு அவர்களை அரசு மருத்துவமனையில் வந்து விட்டேன் என்றால் சம்பவம் நடந்த 5 நிமிடத்திற்குள் மருத்துவமனை வந்து சேர்த்தேன். நான் காயம்பட்ட நபரை எங்கள் தெருவிலிருந்து தான் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். நான் கல்யாணக்குமாருக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் காயம்பட்ட தங்கராஜை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லவில்லை என்றும், அழைத்துச்சென்றிருந்தால் என் உடையிலும் வண்டியிலும் ரத்தம் பட்டிருக்கும் என்றால் சரியல்ல.